செ.வெ.எண்: 64 நாள்: 22.11.2016

## புதுக்கோட்டை மாவட்டத்தில் வருவாய்த்துறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களை விரைவாக வழங்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.

புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.11.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பணிகள் மற்றும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு வருவாய்த்துறையின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் முக்கிய பணிகளை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ள உத்தரவிட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆண்டு தணிக்கையும், புதுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் மற்றும் பணிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இதில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் நினைவூட்டு நாட்குறிப்பேடு, தன்பதிவேடு, ஊதிய உயர்வு பதிவேடு, ஆதரவற்ற விதவை சான்று வழங்கும் பதிவேடு, தண்டனை குறிப்பு பதிவேடு, மழைப்புள்ளி பதிவேடு, வழக்குப்பதிவேடு, அஞ்சல்வில்லை பதிவேடு, நகல் மனு பதிவேடு, ஒருங்கிணைந்த காலமுறை பதிவேடு போன்ற பல்வேறு பதிவேடுகள் மற்றும் பதிவறையும், மேலும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ரொக்க கணக்குப்பதிவேடு, புதிய குடும்ப அட்டை மனுக்கள் பதிவேடு, கோப்புகள் அழிக்கும் பதிவேடு, வருமானச்சான்று வழங்கும் பதிவேடு, பிறப்பு, இறப்பு பதிவேடு, கணினி பட்டா மாறுதல் பதிவேடு (முழுப்புலம்), இருப்பிடச்சான்று பதிவேடு, சிறப்புத் தபால் பதிவேடு, பதிவறைக் கோப்புகள் வழங்கும் பதிவேடு, வருகைத்தபால் பதிவேடு, அம்மா திட்ட மனுக்கள் பதிவேடு மற்றும் பதிவறை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது அலுவலகங்களில் உள்ள அனைத்து பதிவேடுகளையும் முறையாக பராமரிக்கவும், அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களும் தங்களது தொடர்புடைய பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும், மேலும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்வதுடன் சான்றிதழ்களை தாமதமின்றி வழங்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**